**<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>**
**<u>சிபிஐ வழக்குகளை (அதிகாரிகள் அல்லாதவர்களின் வழக்குகள்) விசாரிக்கும் நீதிமன்றம்</u>**

**முன்னிலை : திரு.K.சிவக்குமார், எம்.எல்.,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**கோயம்புத்தூர்.**

**2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் வியாழக்கிழமை**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 1862 / 2021</u>**
(CNR No.TNCBOA-025717-2021)

அரசு சார்பாக : துணை காவல் கண்காணிப்பாளர்,
சிபிஐ, சிறப்பு புலனாய்வு பிரிவு,
சென்னை.
குற்ற எண். RC 03(S)/2021-CBI/SCB/Chennai ... புகார்தாரர்

// எதிராக //

1. மாதப்பா (36), த/பெ.காளையா

2.காளையா (76), த/பெ.நஞ்சையா ... எதிரிகள்

| | |
|---|---|
| குற்றச்சாட்டு விபரம் | எதிரிகள் மீது இதச பிரிவு 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | எதிரிகள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51–ன் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. |
| நீதிமன்றத்தின் தீர்ப்பு | 1ம் எதிரிக்கு இதச 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51 பிரிவின் கீழான குற்றத்திற்கு 3 1/2 வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தும், மேலும் ரூ.25,000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்டத் தவறும் பட்சத்தில் 6 மாதம் மெய்காவல் தண்டனை விதித்தும், தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>2ம் எதிரிக்கு இதச 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51 பிரிவின் கீழான குற்றத்திற்கு 3 1/2 வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தும், மேலும் ரூ.25,000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்டத் தவறும் பட்சத்தில் 6 மாதம் மெய்காவல் தண்டனை விதித்தும், தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| அரசுக்காக முன்னிலையாகும் வழக்குரைஞர் | திரு.V.சுரேந்திர மோகன்,<br>அரசுத்தரப்பில் சிறப்பு வழக்குரைஞர் |
| எதிரிகளுக்காக முன்னிலையாகும் வழக்குரைஞர் | 1 மற்றும் 2ம் எதிரிக்கு<br>திரு.ராஜாமணி |

## வழக்கு விசாரணை விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1 | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | 1ம் எதிரி 22.02.2021 அன்று முன்ஜாமீனில் சென்றுள்ளார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சிறையில் இருந்த காலம் | 2ம் எதிரி 23.12.2020 – 23.01.2021 | | |
| 2 | இறுதி அறிக்கை / புகார் தாக்கல் செய்த தேதி | 29.09.2021 | | |
| 3 | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | பொருந்தாது | | |
| 4 | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | 26.09.2024 | | |
| 5 | கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | இல்லை | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | சாட்சி | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ சா 1 | 21.06.2022<br>24.06.2022 | 15.07.2026 |
| | | அ சா 2 | 06.07.2022 | 05.03.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ சா 3 | 06.04.2024 | 05.03.2026 |
| | | அ சா 4 | 15.06.2024 | – |
| | | அ சா 5 | 15.06.2024 | 01.06.2026 |
| | | அ சா 6 | 15.06.2024 | 01.06.2026 |
| | | அ சா 7 | 02.07.2026 | 02.07.2026 |
| | | எ சா 1 | 23.07.2026 | 23.07.2026 |
| 7 | குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 313–ன் படி குற்றஞ் சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | 04.07.2026 | | |
| 8 | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | இல்லை | | |
| 9 | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | இல்லை | | |

இவ்வழக்கானது கடந்த 29.09.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு 1862/2021 ஆக கோப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அரசு தரப்பில் சிறப்பு அரசு வழக்குரைஞர் திரு.V.சுரேந்திர மோகன், அவர்கள்

முன்னிலையாகியும், எதிரித்தரப்பில் வழக்குரைஞர் திரு.ராஜாமணி, அவர்கள் முன்னிலையாகியும் இதுநாள் வரையில் விசாரணை செய்யப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் இறுதியாக வழங்கும்

**தீ ர் ப் பு**

**1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிறப்பித்த 10.02.2021 உத்தரவின் பேரில் ஜீரஹள்ளி வனச்சரக குற்ற எண்.10/2020 வழக்கானது CBI வழக்கு எண்.RC.03(S)/2021–CBI/SCB/Chennai என மறுபதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், ஈரோடு மாவட்டம், மல்லன்குளி கிராமத்திலுள்ள எதிரிக்கு சொந்தமான Field No.675/5A & 5B என்ற விவசாய நிலம் 1ம் எதிரிக்கு 16.11.2011 தேதிய கிரய பத்திர எண்.2078/2011–ன் படி பாத்தியப்பட்டு விவசாயம் செய்து வந்ததாகவும், 19.12.2020ம் தேதி மேற்படி எதிரிக்கு சொந்தமான நிலத்தில் காட்டு ஆண் யானை மின்சாரம் பாய்ந்து இறந்துள்ளது கண்டறியப்பட்டது என்றும், எதிரிகள் இருவரும் மின் கம்பங்களுக்கு இடையே செல்லும் மின் கம்பியிலிருந்து நேரடியாக மூங்கில் கம்பில் இரும்பு கொக்கி இணைத்து ஒயர் மூலமாக மின்சாரத்தை எடுத்து விவசாய நிலத்தை சுற்றி அமைத்துள்ள கம்பி வேலி இணைத்துள்ளார்கள் என்றும், கம்பிவேலியை யானை தொட்டதால் மின்சாரம் தாக்கி மேற்படி யானை இறந்துவிட்டதாகவும், வனத்துறை அதிகாரிகள் மேற்படி மூங்கில் கம்பு சுமார் 3.5 மீட்டர் நீளம், இரும்பு கொக்கி, மின் வேலி அமைக்க பயன்படுத்தப்பட்ட மூங்கில் கம்பம் 4 எண்ணிக்கை, வெள்ளை நிற PVC Wire 10 Sq mm, 1100 Volt என அச்சிடப்பட்ட ஒயர் (சுமார் 9 மீட்டர்), இரும்பு கம்பி சுமார் 24 மீட்டர் ஆகியவற்றை H நமூனா மூலம் 19.12.2020ல் கைப்பற்றியுள்ளார்கள் என்றும், மேற்படி நிலத்தை

வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக சட்டத்திற்கு புறம்பாக கம்பி வேலி அமைத்து அதில் சட்டத்திற்கு புறம்பாக மின் பாதையிலிருந்து மின்சாரம் திருடி மின் இணைப்பை மின் வேலியில் இணைத்து காட்டு யானையை கொன்றதற்காக, எனவே எதிரிகள் மீது இதச பிரிவு 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 9 உ/இ 51-ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவர்கள் என்பதாகும்.

2. சத்தியமங்கலம், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் புகார் தாக்கல் செய்யப்பட்டு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை WP (MD) No.19771 / 2018ல் பிறபித்த உத்தரவின் படி, "அதிகாரிகள் அல்லாதவர்களின் மீது சிபிஐ தாக்கல் செய்யும் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றமாக இந்நீதிமன்றம் இருப்பதால் இந்நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது". எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

3. எதிரிகளுக்கெதிரான இந்திய தண்டனைச் சட்டம் இதச பிரிவு 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51-ன் கீழான குற்றம் பற்றி விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்தார்கள். ஆகவே எதிரிகளுக்கெதிரான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 31 சான்றாவணங்கள் மற்றும் 6 சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு

பாதகமாக அமைந்துள்ள சாட்சியம் குறித்து குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் விளக்கி வினவப்பட்டது. 1ம் எதிரி பொய்வழக்கு என்றும், தான் சம்பவத்தின் போது மைசூரில் வேலைபார்த்து கொண்டிருந்ததாகவும், அவர் அப்பா (2ம் எதிரி) தனக்கு யானை இறந்து கிடந்தது என போனில் சொன்னதால் வந்ததாகவும் பதிலளித்துள்ளார். 2ம் எதிரி பொய் வழக்கு என்றும், நான் காலையில் எழுந்து பார்த்தபோது யானை இறந்து கிடந்தது என்றும், நான் எந்த தவறும் செய்யவில்லை என்றும் பதிலளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் 1 சாட்சி விசாரிக்கப்பட்டு 4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. இவ்வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51–ன் ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டு ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.**

7. அரசுத்தரப்பு வாதம் என்னவென்றால், எதிரிகள் அவர்களுடைய விவசாய நிலத்தை சுற்றி மின் வேலி அமைத்து, அந்த மின் வேலிக்கு மின் கம்பத்திலிருந்து செல்லும் மின் கம்பியிலிருந்து நேரடியாக மின்சாரம் எடுத்து கொடுத்ததில் அந்த மின்வேலியிலிருந்து மின்சாரம் தாக்கி மேற்படி யானை இறந்துவிட்டதாகவும், மேற்படி நிலத்திலுள்ள பயிர்களை வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக சட்டத்திற்கு புறம்பாக கம்பி வேலி அமைத்து சட்டத்திற்கு புறம்பாக மின் பாதையிலிருந்து மின்சாரம் திருடி மின் இணைப்பை மின் வேலியில் இணைத்து காட்டு யானையை கொன்றதற்காக, எனவே எதிரிகள் மீது இதச பிரிவு 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 9 உ/இ 51–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவர்கள் என்பதாகும். எனவே எதிரி மீது இதச பிரிவு 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம்

9 உ/இ 51–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவர்கள் என்பதாகும்.

8. எதிரிகள் பயன்படுத்திய தடயங்களை மறைத்து எதிரிகள் தலைமறைவாகிவிட்டார்கள் என்றும், மேற்சொன்ன சங்கதிகளை கொண்டு வனக்காப்பாளர், திரு.மணிகண்டன் வன உயிரின குற்ற அறிக்கை எண்.10/2020 தாக்கல் செய்யப்பட்டது என்றும், கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர், சத்தியமங்கலம் அவர்களுக்கு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றும், 19.12.2020 அன்று இறந்த ஆண் யானையில் உடலை பிரேத பரிசோதனை செய்து அதனுடைய தந்தங்கள் அகற்றப்பட்டு யானையின் உடல் புதைக்கப்பட்டது என்றும், 19.12.2020 அன்று முதன்மை உடற்கூராய்வு அறிக்கை (அசாஆ.3) கால்நடை மருத்துவரால் தாக்கல் செய்யப்பட்டது என்றும், தலைமறைவான எதிரிகளில் 1ம் எதிரி மாண்புமிகு ஈரோடு முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவு படி 22.02.2021 அன்று முன்ஜாமினில் சென்றதாகவும், 2ம் எதிரி நீதித்துறை நடுவர், சத்தியமங்கலம் பிறப்பித்த பிடியாணையின் பேரில் 23.12.2020 முதல் 23.01.2021 வரை நீதிமன்ற காவலில் இருந்து வந்ததாகவும், மேற்படி சம்பவ இடத்தில் மின்சாரத்தினை சட்டத்திற்கு புறம்பாக கொக்கி போட்டு எடுத்து யானை இறப்பதற்கு காரணமாக இருந்த வழக்குப் பொருட்களான மூங்கில் கம்பு, வேலி அமைக்க பயன்படுத்தப்பட்ட கம்பம் 4 சுமார் தலா 2 மீட்டர் நீளம் கொண்டது, இரும்பு கம்பி, வெள்ளை நிற HCPVC Wire and Cable 10 sq mm (சா.பொ.2 முதல் 4) கைப்பற்றுதல் மகஜர் (அசாஆ.28) மூலம் கைப்பற்றப்பட்டன என்றும், கைப்பற்றப்பட்ட பொருட்கள் சத்தியமங்கலம் நீதித்துறை நடுவர் முன்பாக H Form.13205 மூலம் தாக்கல் செய்யப்பட்டது என்பதாகும்.

9. மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கையானது சிபிஐ காவல் துறை

கண்காணிப்பாளர் திரு.A.Shiyas என்பவரால் மேற்படி சீரகள்ளி வனச்சரக குற்ற எண்.10/2020 என்ற வழக்கானது சிபிஐ குற்ற எண்.RC.3(S)/2021 என்ற எண்ணில் மறுப்பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை கோயம்புத்துர் தலைமை நீதித்துறை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்னிட்டு வழக்கு விசாரணைக்காக CBI, DSP சந்தோஷ் குமார் (அசா.1) என்பவருக்கு தரப்பட்டது. 15.06.2021 அன்று சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் (அசாஆ.7) தயாரிக்கப்பட்டது. மின்சாரத்துறை அதிகாரியால் தயாரிக்கப்பட்ட மின்சார வழித்தடத்தினை காட்டும் வரைபடம் (அசாஆ.9), இறந்து கிடந்த ஆண் யானையின் புகைப்படங்கள் (அசாஆ.10), 16.06.2021 அன்று உதவி கால்நடை மருத்துவரும், அசா.1ம் ஆண் யானை இறந்து கிடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து, பின் மேற்படி உதவி கால்நடை மருத்துவர் சடலக்கூராய்வின் போது எடுத்த 8 புகைப்படங்கள் மற்றும் Crime Scene mahasar (அசாஆ.13), 05.07.2021ம் தேதி இறந்து போன யானையின் இறுதி சடலக்கூராய்வு அறிக்கை (அசாஆ.24), விசாரணையில் எதிரிகள் அவர்களுடைய விவசாய நிலத்தில் சட்டத்திற்கு புறம்பாக மின்சார வேலி அமைத்து அதில் மேற்சொன்ன யானை 19.12.2020 அன்று மின்சாரம் தாக்கி இறந்துள்ளது என்றும், எனவே எதிரிகள் இதச பிரிவு 34 உ/இ வன விலங்கு பாதுகாப்பு சட்டம் 9 r/w 51 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்பதாகும்.

10. எதிரி தரப்பு வாதம் என்னவென்றால், எதிரிக்கும் அரசுத்தரப்பில் கூறப்பட்டுள்ள குற்றத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றும், யானை இறந்து கிடந்த இடம் கவிசித்தன் என்பவரின் நிலமாகும் என்றும், யானை இறந்து கிடந்த இடத்திற்கு அருகில் மின்கம்பங்கள் இடையே தாழ்வாக சென்ற மின்சார கம்பிகளை இறந்து போன யானை தன்னுடைய தும்பிக்கையை தன்னுடைய தலைக்கு மேலே தூக்கி அந்த கம்பியை தொட்டதில் யானை

மின்சாரம் தாக்கி இறந்துள்ளது என்றும், புகைப்படங்களில் வேலிகள் எதுவும் காணப்படவில்லை என்றும், மின்சாரம் திருடப்பட்டதற்கான குற்றச்சாட்டு வனையப்படாததால் குற்றவாளிகளை தண்டிக்க முடியாது என்றும், சாட்சிகள் அனைவரும் சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்ததாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், வன சட்டப்படி இது போன்ற குற்றங்களை Deputy Superintendent of Police பதவிக்கு குறைவான பதவி வகிப்பவர்கள் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்ய முடியாது என்றும், வழக்கினை நிரூபிக்க ஊர்ஜிதப்படுத்தும் சாட்சிகள் யாரையும் விசாரிக்கப்படவில்லை என்றும், Histopathology reportல் Electrocutionஆல் யானை இறந்தது என்று கூறப்படவில்லை என்றும், மின்சாரம் தாக்கி இறக்கும் பொழுது entry point, exit point ஆகியவை பிரேதத்தில் இருப்பதை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும், மின்சார கம்பங்கள் இடையே செல்லும் மின் கம்பியிலிருந்து மின்சாரம் எடுத்து வேலியில் அமைத்திருந்தால் குறைந்த அழுத்த மின்சாரத்தால் யானை தாக்கப்பட்டு இறந்ததாக அறிக்கை தாக்கல் செய்ய முடியாது என்றும், விசாரணை அதிகாரிகள் சரியான புலன் விசாரணை செய்யாமல் வழக்கை முடிக்க எதிரிகள் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அரசுத்தரப்பு வழக்கில் நிறைய முரண்பாடுகள் காணப்படுகின்றது என்றும், அரசுத்தரப்பு வழக்கை அனைத்து நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், எதிரிகளை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்பதாகும்.

11. **அசா.2** ஆக Forest Ranger சத்தியமங்கலம், திரு.முத்து என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், "நான் தற்பொழுது கோயமுத்தூரில் உள்ள வனசெயல் திட்டம் அலுவலகத்தில் வனசரக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். 20.03.2020 லிருந்து 26.02.2021 வரை நான் சீரகள்ளி வன சரகத்தில் வனசரக அலுவலராக பணியில் இருந்து

வந்தேன். 19.12.2020ம் தேதி காலை 09.45 மணிக்கு நான் பணியில் இருந்த போது வனகாப்பாளர் திரு.மணிகண்டன் அவர்கள் ஆண் யானை வயது சுமார் 10 வயது கொண்ட ஆண்யானை அருள்வாடி கிராமத்தில் மாதப்பா மற்றும் காளையா இருவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் இறந்து கிடப்பதாக தகவல் கொடுத்தார். அந்த தகவலைப் கிடைக்கப்பெற்றவுடன் தினேஷ் என்ற வனவருடன் மற்றும் வனசிப்பந்திகளுடன் நான் சீப்பில் யானை இறந்து கிடந்த இடத்திற்கு சென்றேன். மேற்படி யானை இறந்து கிடந்த இடத்தை பார்த்த போது மக்காசோள தட்டை வைத்து இறந்துபோனை யானையை மூடிவைத்திருந்ததை பார்த்தோம், உடனே அந்த இடத்தை சுற்றி பார்த்தவுடன்அந்த இடத்தில் அமைக்கப்பற்றிருந்த வேலியில் மின்சார கம்பியை பயன்படுத்தி அதில் மின்சார இணைப்பு நேரடியாக கொடுத்து அதன் மூலம் யானை மின்சாரம் தாக்கி இறந்ததாக தெரியவந்தது. உடனே எங்கள் மேலதிகாரிக்கு தகவல் கொடுத்தேன். வனபாதுகாப்பு துறையின் வனபாதுகாப்பு படையினர் சுமார் காலை 11 மணிக்கு அங்கு வந்தார்கள். அதன் பிறகு மின்சார வாரியத்திற்கு சட்டத்திற்கு புறம்பாக அரசாங்கம் சப்பளை செய்யும் மின் வயரிலிருந்து நேரடியாக கொக்கி போன்ற அமைப்பில் வயர்மூலம் மின்சாரம் திருடப்பட்டிருப்பதாக தகவல் கொடுத்தேன். அதன் பிறகு மேலும் மல்லங்குடி கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுத்து அவரும் யானை இறந்து கிடந்த இடத்திற்கு வரவழைத்தேன். மல்லங்குடி கிராம நிர்வாக அலுவலர் திரு.வெங்கடாசலம் அவர்களும் மற்றும் மரூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.லதா அவர்களும் அங்கு வந்தார்கள். அவர்கள் யானை இறந்து கிடந்த நிலத்தினை பார்த்து விட்டு அந்த நிலத்திற்கு உரிமையாளர் யார் என வருவாய் ஆவணங்களை பார்த்து மாதப்பா, த/பெ.காளையா என்பவருக்கு பாத்தியமான நிலம் என வருவாய் துறை ஆவணம் மூலம் சான்றளித்தார். மேற்படி இறந்து போன ஆண்யானையை சடலக்கூராய்வு செய்ய வன கால்நடை மருத்துவர் திரு.அசோகன் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் பிறகு அவரும் அவருடைய உதவியாளரும் அங்கு

வந்தார்கள். அங்கேயே வைத்து யானையின் உடல் சடலக்கூராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் பிறகு அந்த இறந்த யானையின் உடல் ஜேசிபி உதவியுடன் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டது. மேலும் மின்சாரத்தினை சட்டத்திற்கு புறம்பாக கொக்கி போட்டு எடுத்து யானை இறப்பதற்கு காரணமாக இருந்த வழக்குப் பொருட்களை கைப்பற்றினேன். அவைகள் முறையே மூங்கில் கம்பு (மின்கம்பியில் இணைக்கப்பயன்படுத்திய மூங்கில் கம்பத்தில் கட்டப்பட்டு கொக்கியாக பயன்படுத்தப்பட்ட இரும்புக் கம்பியுடன் சுமார் 0.48 மீட்டர்) ஒன்று சா.பொ 2 ஆகும். வேலி அமைக்க பயன்படுத்தப்பட்ட கம்பம் 4 சுமார் தலா 2 மீட்டர் நீளம் கொண்டது. சா.பொ.3 ஆகும். வெள்ளை நிற HCPVC Wire and cable 10Sq mm 1100 வோல்ட் சா.பொ.4 ஆகும். இரும்பு கம்பி ஒரு சுருள் சுமார் 24 மீட்டர் அதன் கலர் புகைப்படம் (Printed) ஒன்று அது அதசாஆ 26 ஆகும். மேற்படி இரும்பு கம்பி ஒரு சுருள் ( 24 மீட்டர் நீளம் கொண்டது வட்டார தடய அறிவியல் அலுவலகம் சென்னைக்கு பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி சம்பவ இடத்தில் இறந்து போன யானையிலிருந்து கால்நடை மருத்துவரால் வெட்டி எடுக்கப்பட்ட வலது தந்தம் ஒன்று நீளம் 87.5 செ.மீ சுற்றளவு 19 செ.மீ இது சாபொ.5 ஆகும். இடது தந்தம் ஒன்று நீளம் 87 செ.மீ சுற்றனவு 18.5 செமீ அது சா.பொ.6 ஆகும். மேற்சொன்ன வழக்குப் பொருட்களை கைப்பற்றி கைப்பற்று மகஜர் தயார் செய்தேன். அதன்பிறகு மேற்சொன்ன சம்பவத்தினை பொருத்து சீரகள்ளி வனசரக வன உயிரின குற்ற அறிக்கை எண். 10/2020 என வழக்கு ஒன்றினை பதிவு செய்து அறிக்கையினை சத்தியமங்கலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். அத்துடன் கைப்பற்றப்பட்ட மேற்சொன்ன பொருட்களை பொருத்து தயாரிக்கப்பட்ட மகசர் மற்றும் இதர ஆவணங்களை அனுப்பி வைத்தேன்" என முதல்நிலை சாட்சியம் அளித்துள்ளார்.

12. **அசா.3** ஆன திரு.அசோகன், கால்நடை மருத்துவர், தனது

சாட்சியத்தில், "நான் தற்பொழுது தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறையில் கோவை கோட்டத்தில் உள்ள கோவில்பாளையம் கால்நடை மருந்தகத்தில் கால்நடை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் வனகால்நடை உதவி மருத்துவராக பணிபுரிந்த காலத்தில் ஆசனூர் கோட்டம் ஜூரகள்ளி வனசரக அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.10/2020 நாள்–19.12.2020 கடித வழி மின்சாரம் தாக்கி இறந்த 10 வயதுடைய காட்டு ஆண் யானையை பிணபரிசோதனை செய்ய வரக்கூறியிருந்தனர். அதன்படி 19.12.2020 யானை இறந்து கிடந்த அருள்வாடி கிராமத்தைச் சேர்ந்த திரு.மாதப்பா என்பவரின் தோட்டத்தில் ஆண் காட்டு யானை இறந்து கிடந்தது. அது இறந்து கிடந்த இடத்தில் விவசாயம் எதுவும் செய்யப்படவில்லை. அதன் அருகில் உள்ள விவசாய நிலத்தில் சேளம் பயிரிட்டு இருந்தனர். இறந்து கிடந்த யானையை மேலோட்டமாக பார்வையிட்டதில் அதன் வயிறு உப்பி இருந்தது. அதன் ஆண் உறுப்பு வெளித்தள்ளி காணப்பட்டது. அதன் ஆசனவாய் வெளித்தள்ளி காணப்பட்டது. அதன் தும்பிக்கையில் இருந்து இரத்தம் கலந்த நீர் வடிந்தபடி காணப்பட்டது. அதன் தும்பிக்கையின் இரு இடங்களில் மின்சாரம் தாக்கிய அடையளம் காணப்பட்டது. தும்பிக்கையின் நுனி பகுதியில் இருந்து 37 செ.மீ உயரத்தில், 15 செ.மீ நீளமுள்ள ஒழுங்குமுறையற்ற அகலத்தில் கரிந்த நிலையில் மின்சாரம் தாக்கிய அடையாளம் காணப்பட்டது. தும்பிக்கையின் நுனி பகுதியில் இருந்து 17 செ.மீ உயரத்தில், 12 செ.மீ நீளமுள்ள ஒழுங்குமுறையற்ற அகலத்தில் மின்சாரம் தாக்கி தோல் கரிந்த நிலையில் காணப்பட்டது. யானையினை உடற்கூராய்வு செய்கையில் அதன் இதயப்பகுதி சிவப்பு நிறத்தில் காணப்பட்டது. அதனை அறுத்துப்பார்க்கையில் அதனுள் கருப்பு நிறத்தில் உறையாத இரத்தம் காணப்பட்டது. அதன் நுரையீரல் பகுதி இளம் சிவப்பு நிறத்துடன், வீக்கத்துடன் காணப்பட்டது. அதன் வயிற்றுப்பகுதியில் அதிகமான அளவு ஜீரணம் ஆகாத உணவு காணப்பட்டது. இதில் சோளம் மற்றும் இதர பயிர்களுடன் காணப்பட்டது. குடற்பகுதியில் ஜீரணமான

உணவுடன் பழுப்பு நிறத்தில் அதிக அளவு நீர் காணப்பட்டது. அதன் சிறுநீரகம் வீங்கிய நிலையிலும், நிறம் மாறிய நிலையிலும் காணப்பட்டது. உடற்கூராய்வின் பொழுது கோவை தடயஅறிவியல் துறையின் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்புவதற்கு வயிற்றுப் பகுதி, குடல் பகுதி, வயிற்றில் இருந்து எடுக்கப்பட்ட ஜீரணமாகாத உணவுபொருட்கள் ஆகியவை எடுக்கப்பட்டது. சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரிக்கு Histopathology அனுப்புவதற்கு யானையின் தும்பிக்கையில் கரிந்த நிலையில் காணப்பட்ட அதன் தோல்பகுதி மற்றும் யானையின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட இருதயத்தின் ஒருபகுதி ஆகியவை எடுக்கப்பட்டது. முதல் நிலை உடற்கூராய்வு அறிக்கையின்படி இந்த யானை மின்சாரம் தாக்கி இறந்துள்ளது என 27.01.2020ல்அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். அந்த உடற்கூராய்வு அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 19.12.2020 அன்று கோவை தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்ட யானையின் உடற்கூறுகளில் விஷத்தன்மை எதுவும் இல்லை என்று கோவை தடய அறிவியல் துறையில் இருந்து 29.01.2021 ல் அறிக்கை கிடைக்கப்பட்டது. அந்த தடய அறிவியல் அறிக்கை **அ.சா.ஆ–27** ஆகும். மேலும் உடற்கூராய்வு சமயத்தில் 19.12.2020ல் மேலே சொன்ன இறந்த யானையின் இரண்டு தந்தங்களை உடலில் இருந்து அகற்றி வனத்துறையினரிடம் ஒப்படைத்தேன். அதன் விவரம் வலது தந்தம் நீளம் 87.5 செ.மீ, நடுச்சுற்றளவு 19 செ.மீ , இடது தந்தம் நீளம் 87 செ.மீ, நடுச்சுற்றளவு 18.5 செ.மீ ஆகும். அந்த யானையின் இடது மற்றும் வலது புற தந்தங்கள் ஏற்கனவே அ.சா.பொ–5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது முதல் நிலை அறிக்கையான அ.சா.ஆ–3 மற்றும் கோவை தடய அறிவியல் துறை ஆய்வறிக்கையான அ.சா.ஆ–27 ஆகியவற்றின் அடிப்படையில் இறந்த ஆண் காட்டு யானை மின்சாரம் தாக்கி இறந்துள்ளது என்று இறுதி உடற்கூராய்வு அறிக்கையை 05.07.2021 ல் சமர்ப்பித்துள்ளேன். அந்த இறுதி உடற்கூராய்வு அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ–24 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. இந்த இறந்த யானை மின்சாரம் தாக்கிய காரணத்தால் அதன் இருதயப்பகுதி பாதிக்கப்பட்டு இறந்துள்ளது. இதனை Ventricular Fibrilladion என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் கோவை தடய அறிவியல் துறையின் அறிக்கையான அ.சா.ஆ–27 மற்றும் 32 GB capacity கொண்ட யானையின் உடற்கூராய்வு செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட video and photos ஆகியவற்றை 16.06.2021 அன்று சிபிஐ அதிகாரிகளிடம் ஒரு Receipt memo மூலம் சமர்ப்பித்தேன். அந்த Receipt memo ஏற்கனவே அ.சா.ஆ–14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலே சொன்ன யானையின் உடற்கூராய்வின் பொழுது video and photos அடங்கிய 32 GB Memory cardஏற்கனவே அ.சா.பொ–1 ஆக அ.சா– 1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 16.06.2021 அன்று சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் யானை இறந்து கிடந்த இடத்தை அடையாளம் காண்பித்து உடற்கூராய்வு சம்பந்தப்பட்ட விவரங்களை சிபிஐ அதிகாரிகளிடம் தெரிவித்தேன். அதன் அடிப்படையில் சிபிஐ அதிகாரிகள் பார்வை மகஜர் ஒன்றை தயார் செய்தனர். அதில் நான் கையொப்பம் இட்டுள்ளேன். அச்சமயம் உடற்கூராய்வின் பொழுது நான் எடுத்த புகைப்படங்களை சிபிஐ அதிகாரிகளிடம் ஒப்படைத்தேன். மேலே சொன்ன பார்வை மகஜர் மற்றும் புகைப்படங்கள் அ.சா.ஆ 13 ஆக அ.சா–1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது" என சாட்சியம் அளித்துள்ளார்.

13. **அசா.6** ஆக மின்வாரிய உதவி செயற்பொறியாளர் மகேந்திரன் தனது சாட்சியத்தில், "கடந்த 19.12.2020 அன்று வனத்துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மல்லன்குளி கிராமத்தில் சர்வே எண். 675/5B இடத்திற்கு சென்று பார்வையிட்டேன். அப்போது மேற்கூறிய சர்வே எண்ணுக்கு அருகில் உள்ள சர்வே எண். 675/1 இடத்தில் ஆண் யானை ஒன்று மின்சாரம் தாக்கி இறந்து கிடந்தது. மேற்கூறிய சர்வே எண். 675/5B

இடமானது திரு.மாதப்பா என்பவருக்கு சொந்தமானதாகும். அந்த இடத்தில் அச்சமயம் சோளம் மற்றும் இதர பயிர்கள் பயிரிடப்பட்டிருந்தது. அந்த இடத்தை சுற்றி மூங்கில் அமைத்து அதை சுற்றி கம்பி வேலிகள் அமைக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய இடத்திற்கு மேலே குறைந்த மின்னழுத்த மின் பாதை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்த மின்பாதையில் இருந்து சுமார் 3.5 மீட்டர் அளவுள்ள மூங்கில் குச்சி மூலம் இரும்பு ஹூக் அமைத்து சுமார் 9 மீட்டர் நீளமுள்ள வயர் மூலம் மின்சாரம் எடுக்கப்பட்டு அந்த இடத்தைச் சுற்றியுள்ள கம்பி வேலியில் இணைக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய மூங்கில் கம்புகள், இரும்பு வேலி, ஹூக் மற்றும் வயர் ஆகியவற்றை வனத்துறை அதிகாரிகள் அந்த இடத்தில் இருந்து அகற்றி அவற்றை கைப்பற்றினர். அந்த கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஏற்கனவே அ.சா.பொ–2, 3 மற்றும் 4 ஆக முறையே அ.சா.–2 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக வனத்துறை அதிகாரிகள் கைப்பற்றுதல் மகஜர் ஒன்றை தயார் செய்தனர். அதில் நான் மற்றும் வனத்துறை அதிகாரிகள் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ– 28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் கடந்த 15.06.2021 அன்று சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்கூறிய இடத்திற்கு சென்று அவர்களுடன் சேர்ந்து மீண்டும் பார்வையிட்டோம். அதற்காக சிபிஐ அதிகாரிகள் பார்வை மகஜர் ஒன்றை தயார் செய்தனர். அதில் நான், வனத்துறை அதிகாரிகள் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். அந்த பார்வை மகஜர் எற்கனவே அ.சா.ஆ–7 ஆக அ.சா–1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சர்வே எண்கள். 675/1 , 675/5A மற்றும் 675/5B ஆகிய இடத்தை சுற்றி அமைந்துள்ள மின் பாதைகள் மற்றும் மின்கம்பங்கள் ஆகியவற்றைக் காண வரைபடம் ஒன்றை தயார் செய்து சிபிஐ அதிகாரிகளிடம் 15.06.2021 அன்று ஒப்படைத்தேன். அந்த வரைபடத்தில் சர்வே எண்.675/5Bல் அமைக்கப்பட்டிருந்த கம்பி வேலியில் மின்சார சட்டத்திற்கு புறம்பாக பொது

மின்பாதையில் இருந்து மின் இணைப்பு இணைக்கப்பட்டதை வரைபடத்தில் குறிப்பிட்டு காண்பித்துள்ளேன். அந்த வரைபடம் ஏற்கனவே அ.சா.ஆ–9 ஆக அ.சா–1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறிய மாதப்பாவுக்கு உரிமையான சர்வே எண்.675/5B ல் உள்ள தனது வீட்டிற்கு வீட்டு மின் இணைப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்களை சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் 15.06.2021 அன்று ஒரு ரசீது மூலம் அவர்களிடம் ஒப்படைத்தேன். அந்த ஆவணம் மற்றும் அதற்கான ரசீது ஏற்கனவே அ.சா.ஆ–11 ஆக அ.சா–1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எங்கள் அலுவலகத்தில் கணிணி மூலம் பராமரிக்கப்படும் மேற்கூறிய ஆவணமான கன்சியூமர் லெட்ஜரின் படி மின் இணைப்பு எண்.365 – 009 – 708 மாதப்பா என்பவர் பெயரில் சர்வே எண்.675/5Bல் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு 12.10.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் திரு.மாதப்பா மின்சார சட்டத்திற்கு புறம்பாக பொது மின் பாதையில் இருந்து மின்சார இணைப்பு எடுத்ததற்காக அவர் மீது தனியாக ஒரு புகார் தாளவாடி, காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய சங்கதிகள் தொடர்பாக சிபிஐ அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள்" என சாட்சியம் அளித்துள்ளார்.

14. **அசா.7** கிராம நிர்வாக அலுவலர் திரு.வெங்கடாசலம் தனது சாட்சியத்தில், "கடந்த 19.12.2020 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் ஜீரஹள்ளி வனத்துறை அதிகாரி என்னை கைபேசியில் தொடர்பு கொண்டு அருளவாடி கிராம எல்லையில் ஆண் காட்டு யானை ஒன்று இறந்து கிடப்பதாகவும் உடனடியாக சம்பவ இடத்திற்கு வரும்படியும் என்னை கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் வட்டாட்சியரிடம் தகவல் தெரிவித்து சம்பவ இடத்திற்கு சுமார் 11.00 மணியளவில் சென்றேன். சம்பவ இடமான மல்லன்குளி கிராமம் சர்வே எண்.675/1 எல்லையில் ஆண் காட்டு யானை

ஒன்று இறந்து கிடந்தது. யானை இறந்து கிடந்த இடத்திற்கு எல்லையில் 675/5A,5B ஆகிய இடம் அமைந்துள்ளது. சர்வே எண்.675/1 ஆனது ராமன் மகன் கவிச்சித்தன் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். 675/5A,5Bஇடமானது காளையா மகன் மாதப்பாவுக்கு பாத்தியப்பட்ட இடமாகும். சம்பவ தினமான 19.12.2020 அன்று நான் பார்வையிட்டபோது மாதப்பா தனக்கு பாத்தியப்பட்ட இடமான சர்வே எண்.675/5A,5B ஆகிய இடத்தில் ராகியும், மக்காச்சோளமும் பயிரிட்டிருந்தார். 675/1 சர்வே எண் அடங்கிய இடத்தில் தரிசு நிலமாக இருந்தது. மாதப்பாவுக்கு மேற்சொன்ன மாதப்பாவுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.675/5A,5B இடத்தை ஒட்டி கம்பிவேலி அமைக்கப்பட்டிருந்தது. அந்த கம்பிவேலியின் பொது மின்சார ஒயரிலிருந்து கொக்கி போட்டு ஒயர் மூலம் மின்சாரம் எடுக்கப்பட்டு கம்பிவேலியில் இணைக்கப்பட்டிருந்தது. அந்த மின்வேலியில் சிக்கி தான் ஆண் காட்டு யானை இறந்தது என்பது புலப்படுகிறது. அதன்பின்னர் வனத்துறை அதிகாரிகள் மின்சாரத்துறை அதிகாரிகளுடன் சேர்ந்து கம்பிவேலிகள் மின்சார ஒயரிலிருந்து கொடுக்கப்பட்டிருந்த இணைப்பு ஒயர் மூங்கில் கம்பங்கள், ஒயர்கள் மற்றும் இரும்பு கம்பி ஆகியவற்றை அகற்றி அவற்றை கைப்பற்றினர். கைப்பற்றி அதற்காக கைப்பற்றுகை மகஜர் ஒன்றை தயார் செய்தனர். அதில் நான் சரிபார்த்து சாட்சி கையொப்பமிட்டேன். அந்த கைப்பற்றுகை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ–28 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன அ.சா.ஆ–28ல் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஏற்கனவே சா.பொ–2 முதல் 4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் அன்றைய தினமே சம்பவ இடத்தை வைத்து வனத்துறை அதிகாரி சம்பவ இடத்தை களஆய்வு செய்து அறிக்கை வழங்கும்படியும் மேற்சொன்ன இடத்திற்கான FMB sketchஐ வழங்கும்படியும் வேண்டுகோள் கடிதம் ஒன்றை என்னிடம் கொடுத்தார். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ–29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் மேற்சொன்ன சம்பவ இடத்தை களஆய்வு செய்து அறிக்கை ஒன்றை வனத்துறை அதிகாரியிடம் அன்றைய தினமே சமர்ப்பித்தேன்.

மேற்சொன்ன என்னுடைய களஆய்வு அறிக்கை **அ.சா.ஆ–30** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் வனத்துறை அதிகாரி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சம்பவ இடத்திற்கான FMB sketch ஐ அவரிடம் கையொப்பமிட்டு சமர்ப்பித்தேன். அந்த FMB sketch **அ.சா.ஆ–31** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் 6 மாதம் கழித்து 15.06.2021 அன்று சிபிஐ அதிகாரிகள் எங்களது வட்டாட்சியர் மூலம் என்னையும் வட்டாட்சியரையும் துணை வட்டாட்சியரையும் சர்வே Inspectorஐயும் யானை இறந்து கிடந்த சம்பவ இடத்திற்கு வரும்படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அன்றைய தினமே காலை சுமார் 10.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றோம். அன்றைய தினம் மின்சாரத்துறை அதிகாரிகளும் வனத்துறை அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு வந்தனர். அதன்பின்னர் சிபிஐ அதிகாரிகள் மேற்சொன்ன யானை இறந்து கிடந்த இடம் கம்பிவேலி அமைக்கப்பட்டிருந்த பகுதி, பொதுமின்சார கம்பி, மாதப்பாவுக்கு பாத்தியப்பட்ட வீடு ஆகியவற்றை பார்வையிட்டு அளவீடு செய்தனர். அதற்காக பார்வை மகஜர் ஒன்றை சிபிஐ அதிகாரிகள் தயார் செய்தனர். அதை நான் சரிபார்த்து சாட்சியாக கையொப்பமிட்டேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் ஏற்கனவே யானை இறந்து கிடந்த இடத்தை எடுத்த புகைப்படத்தில் நான் சாட்சியமாக கையொப்பமிட்டேன். மேலும் சிபிஐ அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க எங்களது சர்வேயர் உதவியுடன் சம்பவ இடம் மற்றும் அதனை சுற்றியுள்ள இடத்திற்கான FMB sketch தயார் செய்து அதில் நானும் சர்வேயர் மற்றும் வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் ஆகியோர் கையொப்பமிட்டு சிபிஐ அதிகாரிகளிடம் ஒப்படைத்தோம். மேற்சொன்ன புகைப்படம் மற்றும் FMB sketch ஏற்கனவே அ.சா.ஆ–8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் எங்களது வட்டாட்சியர் உமாமகேஷ்வரன் உத்தரவின்பேரில் மல்லன்குளி கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண். 675/1, 675/2, 675/5A மற்றும் 5B ஆகிய இடங்களுக்கான பசலி ஆண்டு 1930 தொடர்பான அடங்கல்

ஆவணத்தை வட்டாட்சியரிடம் சமர்ப்பித்தேன். அந்த அடங்கல் ஏற்கனவே அ.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பசலி ஆண்டு என்பது ஒவ்வொரு ஆங்கில ஆண்டின் ஜுலை தொடங்கி அடுத்த ஆங்கில ஆண்டு ஜுன் வரை உள்ளது ஆகும். மேற்சொன்ன பசலி ஆண்டு 1930 என்பது ஜுலை 2020முதல் ஜுன் 2021 வரை உள்ள காலத்தை குறிக்கும். மேற்சொன்ன அ.சா.ஆ–4 அடங்கலின்படி சர்வே எண்.675/5A மற்றும் 5B காளையா மகன் மாதப்பாவுக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலமாகும். அதில் அந்த காலகட்டத்தில் ராகி மற்றும் மக்காச்சோளம் பயிரிடப்பட்டிருந்தது. 675/1 இடமானது ராமன் மகன் கவிச்சித்தனுக்கு பாத்தியப்பட்டதாகும். அந்த இடத்தில் மேற்சொன்ன காலகட்டத்தில் எவ்வித விவசாயமும் செய்யப்படவில்லை. அது தரிசு நிலமாக தான் இருந்தது. மேற்சொன்ன சங்கதிகள் குறித்து சிபிஐ அதிகாரிகள் என்னை விசாரணை செய்தனர்" என சாட்சியம் அளித்துள்ளார்.

15. **அசா.1** ஆக மத்திய குற்ற புலனாய்வு துறை, துணை கண்காணிப்பாளர் திரு.சந்தோஷ் குமார் தனது சாட்சியத்தில், "நான் தற்பொழுது சென்னையில் உள்ள மத்திய புலனாய்வு துறை சிறப்பு குற்ற பிரிவில் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் நான் தான் புகார்தாரர். இந்த வழக்கானது மாண்மிகு மதுரை கிளை நீதிப்பேரணை மனு எண். WP. No.(MD)19771/2018 நாள் 10.02.2021 பிறப்பிக்கப்பட்டது. மேற்படி உத்தரவின்படி தமிழ்நாடு வனத்துறை சீரகள்ளி ரேன்ஜ் ஆல் பதிவு செய்யப்பட்ட வழக்கு எண். WLOR 10/2020தேதி 19.12.2020 ல் எண்ணில் விசாரிக்க சிபிஐ க்கு விசாரிக்க உத்தரவிடப்பட்டு அதில் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டேன். அதன் பிறகு சிபிஐ தனியாக முதல் தகவல் அறிக்கையினை திரு. மாதப்பா, மற்றும் காளையா ஆகியோர்கள் பெயரில் பதிவு செய்து அதனை புலன் விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் எண்.RC 3 (S) /2021 இந்த வழக்கானது வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 2, 9,

39, 50 மற்றும் 57ன் படியும் மற்றும் உ/இ 51, 52 உடன் வனையப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அது அதசாஆ 1 ஆகும்.(15 தாள்களை கொண்டது). அதில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த கவரும் அடங்கும். மேற்படி முதல் தகவல் அறிக்கை மாண்மிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்த ஆணையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையானது CBI/SCB Chennai ன் காவல் துறை கண்காணிப்பாளர் A Shiyas அவர்களால் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்கு என் வசம் ஒப்படைக்கப்பபட்டது. நான் புலன் விசாரணை செய்த போது தாளவாடியில் உள்ள சப் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை சரிபார்த்த பின்பு 1ம் எதிரி மாதப்பாவுக்கு சொந்தமான விவசாய நிலத்தில் மின்வேலி அமைக்கப்பட்டிருந்தது. அந்த நிலத்திற்கு சம்மந்மான சொத்து பதிவு ஆவணங்களை சரிபார்த்த பின்பு அந்த நிலம் மாதப்பாவுக்கு சொந்தம் என தெரிய வந்தது. அவர் விவசாயம் செய்த நிலத்தை சுற்றி மின் வேலி அமைத்திருந்தார். அந்த நிலங்களுக்கு சொந்தமான பதிவு துறை ஆவணங்களை 16.06.2021 ம் தேதி ஒரு கவரிங் லெட்டர் மூலம் பெற்றேன். அந்த ஆவணம் அதசாஆ 2 ஆகும் (25 தாள்கள் கொண்டது) மேற்படி 1, 2 எதிரிகள் தான் மின்வேலி அமைத்திருந்த நிலங்களில் சோளம் மற்றும் ராகிபயிர் செய்திருந்தனர். வனத்துறை அதிகாரிகள் நான் விசாரணை மேற்கொள்வதற்கு 6 மாங்களுக்கு முன்னதாகவே மேற்படி மாதப்பா மற்றும் காளையா பயிர் செய்து வந்த நிலங்களுக்கு அருகில் உள்ள லேட் ராமன் அவர்களுக்கு சொந்தமான நிலத்தில் ஒரு இறந்த ஆண்யானையின் உடல் வனத்துறை அதிகாரிகளால் பார்வையிடப்பட்டு அதன் பிறகு இறந்த யானை விலங்கியல் மருத்துவரின் சடலக்கூராய்வுக்கு உட்படுத்தப்பட்டு இறப்பிற்பான காரணத்தை ஆய்வு மூலம் அறிந்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது அந்த அறிக்கையின் நகலை நான் பெற்றுக்கொண்டேன். மேற்படி சடலக்கூராய்வு அறிக்கையில் மேல்படி யானை மின்சாரம் தாக்கியதால் இறந்திருக்க கூடும் என ஆய்வில்

தெரியப்படுத்தியுள்ளார். அந்த சடலக்கூராய்வு அறிக்கை அதசாஆ 3 ஆகும். மேற்படி மின்வேலி அமைக்கப்பட்டிருந்த நிலத்தின் உரிமையாளர் சம்மந்தப்பட்ட வருவாய்துறை ஆவணங்களையும் மற்றும் இறந்த யானையின் உடல் இருந்த நிலத்தின் உரிமையாளரை விசாரித்து வருவாய் ஆவணங்களை பெற்றேன். 17.06.2021ம் தேதி மேற்படி நிலங்களுக்கு சம்மந்தமான சிட்டா அடங்கள் கணக்கு ஆ பதிவு ஆவணங்களை நகல்களை நான் பெற்றுக் கொண்டேன். அவை அதசாஆ 4 ஆகும் (5 தாள்களை கொண்டது) என்றும்,

மேலும் தனது முதல் விசாரணை தொடர்ச்சியில், "எனது புலன் விசாரணையின் போது 15.06.2021ம் தேதி திருமதி.பி.பாரதி வனஅலுவலர், திருமதி.லதா கிராம நிர்வாக அலுவலர் மற்றும் 1, 2 எதிரிகளை விசாரித்து வாக்குமூலம் பதிந்தேன். 16.06.2021 அன்று துணை வட்டாட்சியர் தாளவாடி திரு.எம்.ஜெகநாதன் அவர்களையும், மற்றும் திருமதி .விஜயா ராஜன், துணை நில ஆய்வாளர் அவர்களையும் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் திரு ஆர் வெங்கடாச்சலம், மல்லம்குழியை நிர்வகித்து வரும் மேற்படி அலுவலரையும் விசாரித்து வாக்குமூலம் பதிந்தேன். அன்றைய தினமே தமிழ்நாடு மின்சார வாரியம் தாளவாடியில் உள்ள உதவி செயற்பொறியாளர் மகேந்திரன் அவர்களையும் மற்றும் உதவி பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம், ஈரோடு மகேஷ் அவர்களையும் மற்றும் தாளவாடி தமிர்நாடு மின்வாரியத்தை சேர்ந்த கோவிந்தா அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிந்தேன். மறுநாள் 17.06.2021 அன்று வனத்துறையைச் சேர்ந்த கீழ்கண்ட அதிகாரிகளை விசாரித்தேன். வன காவலர் மணிகண்டன் வன சரகர் திரு.முத்து, விலங்குகளை வேட்டையாடுவதை தடுக்கும் பாதுகாவலர் திரு.கார்த்திகா மற்றும் அந்த குழுவில் சேர்ந்த ராபர்ட் மகேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்தேன். பிறகு வருவாய் துறையைச் சேர்ந்த தாளவாடி வட்டாட்சியர் திரு.உமாமகேஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிந்தேன். 18.06.2021 அன்று வன துறையைச் சேர்ந்த தற்காலிக பணியாளர்

சுனில்குமார்(Anti Depredation Squad) மற்றும் கனிணி செயல்பாட்டாளர் காமராஜ் அவர்களையும் விசாரித்தேன். மேலும் வேட்டையாடுவதை தடுக்கும் பாதுகாவலர் சுனில் மகேந்திர பிரசாத்தையும் விசாரித்தேன் அதன்பிறகு அந்த கிராமத்தை சேர்ந்த புட்டுராஜ் மற்றும் சாதமாதய்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதி்நேதன் 19.06.2021 அன்று வன அலுவலர் திரு தினேஷ் அவர்களை விசாரித்தும் பின்னிட்டு வன சர அலுவலர் கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் விசாரித்தேன். அதே நாள் வன பாதுகாவலர் திரு சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிந்தேன். 23.06.2021 அன்று இறந்து போன யானையின் சடலக்கூராய்வு மேற்கொண்ட உதவி விளங்கியல் மருத்துவர் திரு.அசோகன் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிந்தேன். 01.07.2021 அன்று துணை இயக்குநர் வட்டார தடய ஆய்வகம் சென்னையில் பணிபுரியும் திரு.ஹேமலதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிந்தேன். எனது விசாரணையின் போது 12.06.2021ம் தேதி தமிழ்நாடு மின்சார வாரியம் தாளவாடி அலுவலகத்தில் இருந்து சட்டத்திற்கு புறம்பாக மின்சாரம் திருடப்பட்டது குறித்து காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்மந்தமாக ஆவண கோப்பினை ஒரு ரிசிப்ட் மெமோ மூலம் பெற்றேன். அந்த Recepit Memo அந்த கோப்பு அதசாஆ 5 ஆகும். (90 பக்கங்களை கொண்டது ) மேற்சொன்ன Recepit Memo அதசாஆ 6 ஆகும்.(1 தாள்) இதில் என்னுடைய கையொப்பமும் கோப்பினை என்னிடம் சமர்ப்பித்திருந்த ஏ.மகேஷ் என்பவருடைய கையொப்பமும் உள்ளது. சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட பார்வைமகசர் அதசாஆ 7 ஆகும். இந்த மகசரானது சம்பவ இடத்தை நான் காவல் அதிகாரிகள் வனதுறை அதிகாரிகள் மற்றும் சிபிஐ அதிகாரிகள். மின்வாரிய துறை அதிகாரிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் பார்வையிட்டு தயார் செய்தேன். சம்பவம் நடந்த இடத்தினை குறித்து 15.06.2021ம் தேதி தயாரிக்கப்பட்ட Field No.625 மல்லன்குழி கிராமத்தின் வரைபடம் 2 புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது. அது அதசாஆ 8 ஆகும். மேலும் மின்சார வாரியத்திலிருந்து சம்பவ் இடம்

அமைந்துள்ள சர்வே எண்.675 ல் நிலத்திற்கு மேலே செல்லும் மின்சார வழிதடத்தினை காட்டும் வரைபடத்தினை பெற்றேன். அந்த வரைபடம் அதசாஆ 9 ஆகும். சம்பவ இடத்தில் இறந்து கிடந்த ஆண்யானையின் புகைப்படங்கள் 6 எண்ணிக்கைகள் அதசாஆ 10 வரிசைகள் ஆகும். இது வனத்துறையில் இருந்து பெறப்பட்டதாகும். 15.06.2021ம் தேதி தாளவாடியில் அமைந்துள்ள TNEB அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட மாதப்பா பெற்றிருந்த மின் இணைப்பு சம்பந்தமாக Consumer ledger ஆகும். இதனை 15.06.2021 தேதியிட்ட Receipt memo மூலம் பெற்றேன். அது அதசாஆ 11 ஆகும். ( 4 தாள்கள் கொண்டது) 15.06.2021 அன்று மாதப்பா மற்றும் காளைய்யா அவர்களுடைய பண்ணை வீட்டை சோதனையிட்டு 11 வழக்கு பொருட்களை கைப்பற்றினேன். அந்த சோதனை பட்டியல் அதசாஆ 12 ஆகும். மேற்சொன்ன 11 பொருட்களும் சோதனை பட்டியலில் குறிப்பிட்டுள்ளேன். அந்த சோதனையானது வனத்துறை அதிகாரியான திருமுருகன், மற்றும் N.தினேஷ் ஆகியோர் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுடைய கையொப்பமும், என்னுடைய கையொப்பமும் மற்றும் அங்கிருந்த சாட்சிகள் கையொப்பமும் பெறப்பட்டது. அது அதசாஆ 12 உள்ளது. மேற்சொன்ன 11 அயிட்ட வழக்கு பொருட்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அது நீதிமன்ற சா.பொ 1 முதல் 17 ஆக எண் வழங்கப்பட்டு சா.பொ 6ஐ தவிர மற்ற சா.பொ வட்டார தடயவியல் சென்னை அவர்களுக்கு அறிக்கை கேட்டு அனுப்பட்டுள்ளது. 16.06.2021ம் தேதி நானும் உதவி கால்நடை மருத்துவரும் ஆண்யானை இறந்து கிடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் தயார் செய்தேன். அப்போது மேற்படி உதவி கால்நடை மருத்துவர் சடலக்கூராய்வின் போது எடுத்த 8 புகைப்படங்களை என் வசம் கொடுத்தார் அதையும் பார்வைமகசருடன் இணைத்துள்ளேன். அந்த புகைப்படம் மட்டும் Crime scene mahazer அதசாஆ 13 ஆகும். 16.06.2021ம் தேதி வட்டார தடய அறிவியல் அலுவலகத்தில் வழங்கிய அறிக்கையை ஒரு Recepit Memo மூலம் பெற்றேன்.

மேற்குறித்த Recepit Memo அதசாஆ 14 ஆகும். அந்த அறிக்கையோடு 32 GB Sandisc Ultra Micro SD Memory Cardஐ பெற்றேன். அது அதசாபொ 1 ஆகும். 17.06.2021ம் தேதி Receipt Memo மூலம் WLOR 10வது தாளின் சான்றிட்ட நகலையும், Forest Guard Report Bookன் 64காவது பக்கத்தின் சான்றிட்ட நகலையும் Jeerahalli Forest Range ன் Rainfall Register ன் 18 மற்றும் 19வது பக்கத்தின் சான்றிட்ட நகலையும் பெற்றேன். அது அதசாஆ 15 வரிசைகள் ஆகும். (அது 15 தாள்கள் கொண்டது) 17.06.2021ம் தேதி தாளவாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மல்லங்குழி கிராம சர்வே எண்.675/1, 675/2, 675/5A, 675/5B ஆகிய சர்வே எண்களுக்கு சம்மந்தமான அடங்கள் மற்றும் ஆ பதிவேடு விபரங்களை பெற்றேன். அவைகள் அதசாஆ 16 வரிசைகள் ஆகும் (9 தாள்கள் ஆகும்) 17.06.2021ம் தேதி மாதகள்ளி கிராமத்தில் டிசம்பர் 2020ம் ஆண்டு இருந்த தட்ப வெட்ப நிலையை காட்டக்கூடிய பதிவேட்டின் நகலினை ஒரு கவரிங் லெட்டர் முலம் பெற்றேன். அது அதசாஆ 17 ஆகும். (2 தாள்களை கொண்டதாகும்). 18.06.2021ம் தேதி வேளாண்மை உதவி இயக்குநர், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், தாளவாடி அவரிடமிருந்து மேற்சொன்ன சர்வே நம்பரில் உள்ள மண் அமைப்பினை பொருத்து அறிக்கையினை பெற்றேன். அது அதசாஆ 18 ஆகும். (1 தாள் கொண்டது) 19.06.2021ம் தேதி சம்பவத்திற்காக பயன்படுத்திய சட்டத்திற்கு புறம்பாக மின்சாரம் திருடபயன்படுத்திய வயர் மூங்கில் குச்சி ஆகியவற்றின் புகைப்படங்களை சீரஹள்ளி பாரஸ்ட் ரேன்ஜர் வனசரக அதிகாரியிடமிருந்து பெற்றேன். அது அதசாஆ 19 ஆகும். (5 புகைப்படங்களை கொண்டது) அந்த புகைப்படங்களை S திருமுருகன் என்ற வனத்துறை அதிகாரியிடமிருந்து Receipt Memo மூலம் பெற்றேன். அந்த Receipt Memo அதசாஆ 20 ஆகும். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 64பி–ன் கீழான சான்றிதழ் அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 29.06.2021ம் தேதி திரு மாதப்பா பயன்படுத்திய மொபைல் நம்பர் 9663061372 CAF மற்றும் CDR ஆகியவைகளை

பாரதி ஏர்டெல் லிட் நிறுவனத்தின் Nodal Officer அவரிடமிருந்து கவரிங் லெட்டர் மூலம் பெற்றேன். அது அதசாஆ 21 ஆகும். (4 தாள்களை கொண்டது) 01.07.2021ம் தேதி தமிழ்நாடு கால்நடை மற்றும் வனவிலங்கு அறிவியல் பல்கலைகழக சோதனை கூடத்திலிருந்து அறிக்கையினை பெற்றேன். அந்த அறிக்கை அதசாஆ 22 ஆகும். தற்பொழுது 05.07.2021ம் தேதி திரு காளைய்யா திருமதி அஸ்வினி, சசிக்குமார் ஆகியோர்கள் பயன்படுத்திய மொபைல் போன்களின் CAF மற்றும் CDR ஆகியவைகளை பெற்றேன். அது அதசாஆ 23 ஆகும். ( 7 தாள்களை கொண்டது ) 05.07.2021ம் தேதி இறந்து போன யானை சம்பந்தமாக இறுதி சடலக்கூராய்வு அறிக்கையை பெற்றேன். அது அதசாஆ 24 ஆகும். மேற்கண்ட சாட்சிகங்களை பெற்று அவைகளை படித்து பார்த்து நீதிமன்றத்தின் முன்பு எதிரிகள் மீது வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் இந்த குற்ற புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது அது அதசாஆ 25 ஆகும்" என சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேற்கண்ட அசா.2, 3, 6, 7 ஆகியவர்களின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் பிரேத அறிக்கையான அசாஆ.3, அசாஆ.7, 8, 9, 10 மற்றும் தடய அறிவியல் துறை அறிக்கையான அசாஆ.14 ஆகிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றிலிருந்து சம்பவ இடத்தில் ஒரு ஆண் யானை மின்சாரம் தாக்கி இறந்துள்ளது என்ற பொருண்மை நிரூபணமாகிறது.

17. அடுத்ததாக, எதிரிகளின் செயலால் இறந்து போன யானை மின்சாரம் தாக்கி இறந்ததா? என்று ஆராய்ந்து பார்க்கும் பொழுது சார்பதிவாளர் திரு.சுவாமிநாதன் **அசா.4** ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சர்வே எண்.675/5 1ம் எதிரி மாதப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்பதை 16.11.2011 தேதிய கிரய ஆவணமான அசாஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சாட்சியம் அளித்துள்ளார். இதன்மூலம் மற்றும் அசாஆ.16 ஆன அடங்கல் ஆகியவற்றின்

மூலம் சர்வே எண்.675/5 என்ற நிலம் எதிரிகளுக்கு பாத்தியப்பட்டது என நிரூபிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக, உதவி மின் செயற்பொறியாளரான **அசா.6** தனது சாட்சியத்தில் 675/5B என்ற நிலத்தில் சோளம் பயிரிடப்பட்டிருந்தது என்றும், அந்த இடத்தை சுற்றி கம்பி வேலிகள் அமைக்கப்பட்டிருந்தது என்றும், அந்த இடத்திற்கு மேலே குறைந்த மின்னழுத்த மின்பாதை ஒன்று அமைந்திருந்தது என்றும், அந்த மின் பாதையிலிருந்து 3.5 மீட்டர் அளவுள்ள மூங்கில் குச்சி மூலம் இரும்பு ஹுக் அமைத்து 9 மீட்டர் நீளமுள்ள ஒயர் மூலம் மின்சாரம் எடுக்கப்பட்டு மின்வேலியில் இணைக்கப்பட்டிருந்தது என்றும், அவற்றை வனத்துறை அதிகாரிகள் அகற்றி கைப்பற்றினர் என்றும், கைப்பற்றப்பட்ட பொருட்கள் சா.பொ.2, 3, 4 என அசா.2 மூலம் குறியீடு செய்யப்பட்டு கைப்பற்றுதல் மகஜர் அசாஆ.28 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என சாட்சியம் அளித்துள்ளார். அசா.7 ஆன கிராம நிர்வாக அதிகாரி தனது முதல் விசாரணையில் சர்வே எண்.675/5A, 5B மாதப்பாவிற்கு பாத்தியப்பட்ட என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அசா.2, 6, 7 ஆகிய சாட்சியங்களிலிருந்தும் மற்றும் அசாஆ.15 ஆன பிடிப்பொருள் பதிவேடு, அசாஆ.19, 20 ஆகிய பிடிப்பொருட்கள் புகைப்படம், அசாஆ.28ஆன கைப்பற்றுதல் மகஜர் ஆகிய சான்றாவணங்கள் மற்றும் மேற்கண்ட அசா.2, 3, 6, 7 ஆகியவர்களின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் பிரேத அறிக்கையான அசாஆ.3, அசாஆ.7, 8, 9, 10 மற்றும் தடய அறிவியல் துறை அறிக்கையான அசாஆ.14 ஆகிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றிலிருந்து எதிரிகள் தங்கள் நிலத்தை சுற்றி வேலி அமைத்துள்ளதும், அதற்கு மின் பாதை கம்பியிலிருந்து நேரடியாக இரும்பு கொக்கி, மின் ஒயர்கள் கொண்ட மூங்கில் கொண்டு மின்சாரம் எடுத்து வேலிக்கு இணைப்பு கொடுத்துள்ளதும், அங்கே சென்ற இறந்து போன யானை கம்பி வேலியை தும்பிக்கையால் தொட்டதால் மின்சாரம் தாக்கி இறந்தது நிரூபணமாகிறது.

18. யானை இறந்து கிடந்த இடம் கவிசித்தன் என்பவரின் நிலமாகும் என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. அசாஆ.31 ஆன சர்வே எண்.675க்கான புல வரைபடத்தை பார்க்கும் பொழுது 675/5Bக்கு மேற்கே ஒட்டினார்போல் 675/1 உள்ளது. 675/1 என்பது தான் கவிசித்தன் என்பவருடைய இடமாகும். 675/5 சர்வே எண்ணில் மேற்கு புற எல்லையில் கம்பி வேலி இருந்த பட்சத்தில் அதில் மின்சாரம் தாக்கினால் அதற்கு ஒட்டியிருக்கும் நிலத்தில் தான் யானை இறந்துகிடக்க முடியும். எனவே எதிரிகளின் நிலத்தில் இருந்த வேலியிலிருந்த மின்சாரம் தாக்கி தான் யானை சர்வே எண்.675/1ல் விழுந்துள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. யானை இறந்து கிடந்த இடத்திற்கு அருகில் மின்கம்பங்கள் இடையே தாழ்வாக சென்ற மின்சார கம்பிகளை இறந்து போன யானை தன்னுடைய தும்பிக்கையை தன்னுடைய தலைக்கு மேலே தூக்கி அந்த கம்பியை தொட்டதில் யானை மின்சாரம் தாக்கி இறந்துள்ளது என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. வனவிலங்குகளிலேயே மிகவும் புத்திசாலியான, உணர்ச்சி பூர்வமான நியாபக சக்தி அதிகமுடைய, உருவில் பெரியதான விலங்கினம் தான் யானை. யானை தும்பிக்கையை மேலே தூக்கி மின் ஒயரை தொடும் அளவிற்கு மின் கம்பிகள் தாழ்வாக சென்றது என்பதை எதிரிகள் தான் நிரூபித்திருக்க வேண்டும். ஆனால் எதிரிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை. மேலும் எதிரிகளின் இந்த வாதம் சற்றும் நம்பத்தகுந்ததாக இல்லை. புகைப்படங்களில் வேலிகள் எதுவும் காணப்படவில்லை என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. புகைப்படங்களில் வேலிகள் காணப்படவில்லை என்றாலும், அசா.2, 6, 7 ஆகிய சாட்சிகள் எதிரிகளின் நிலத்தில் வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன என்பது குறித்தும், மின்சாரம் எடுத்ததற்கான இரும்பு கொக்கி, ஒயர்கள் மற்றும் மூங்கில் குச்சிகள் ஆகியவை குறித்தும் சாட்சியமளித்துள்ளார்கள் என்பதிலிருந்தும், அனைத்திற்கும் மேலாக அசா.1ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபொழுது இறந்து போன யானைக்கும், வேலிக்கும் இடைப்பட்ட தூரம்

எவ்வளவு என கருத்துவினா கேட்கப்பட்டதிலிருந்து எதிரிகளே வேலி இருந்ததை ஒப்புக்கொள்வது தெரிகின்றது. மின்சாரம் திருடப்பட்டதற்கான குற்றச்சாட்டு வனையப்படாததால் குற்றவாளிகளை தண்டிக்க முடியாது என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. மின்சார திருட்டு என்பது தனிப்பட்ட குற்றம். அது சம்மந்தமாக எதிரிகள் மீது தாளவாடி காவல் நிலையத்தில் குற்ற எண்.418/2020 என்ற முதல் தகவல் அறிக்கை 21.12.2020ல் 1ம் எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதை அசாஆ.5ல் உள்ள தாள்களுடன் அசா.1ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மின்சார திருட்டு தனிப்பட்ட குற்றம் என்பதால் அதை பற்றி கைவசமுள்ள இந்த வழக்கில் குற்றச்சாட்டு வனையப்பட வேண்டியதில்லை. சாட்சிகள் அனைவரும் சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்ததாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்தார்கள் என்பது சிபிஐ அதிகாரிகள் வேண்டிகொண்டதற்கிணங்க ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டன என்று தான் அர்த்தமே தவிர சிபிஐ அதிகாரிகளுக்காக அவர்கள் கூறும்படி ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்ததாக அர்த்தமாகாது என இந்த நீதிமன்றம் மேற்படி எதிரிகள் தரப்பு வாதத்திற்கு பொருள் விளக்கம் காண்கிறது. வன சட்டப்படி இது போன்ற குற்றங்களை Deputy Superintendent of Police பதவிக்கு குறைவான பதவி வகிப்பவர்கள் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்ய முடியாது என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த குற்றப்பத்திரிக்கையான அசாஆ.25 தாக்கல் செய்த அதிகாரி மத்திய புலனாய்வு துறையின் துணை கண்காணிப்பாளர் ஆவார் என்பதால் எதிரிகளின் இந்த வாதமும் வழுவிலந்ததாகிறது. வழக்கினை நிரூபிக்க ஊர்ஜிதப்படுத்தும் சாட்சிகள் யாரையும் விசாரிக்கப்படவில்லை என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. அசா.2 சாட்சியத்தை அசா.3, 4, 5, 6, 7 ஆகிய சாட்சிகள் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்கள். எனவே எதிரிகளின் இந்த வாதமும்

செல்லாததாகின்றது. Histopathology reportல் Electrocutionஆல் யானை இறந்தது என்று கூறப்படவில்லை என்றும், மின்சாரம் தாக்கி இறக்கும் பொழுது entry point, exit point ஆகியவை பிரேதத்தில் இருப்பதை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. Histopathology Reportல் இறந்து போன யானையின் உடற்பாகங்கள் அழுகிய நிலையில் இருந்ததால் மின்சாரம் தாக்கி யானை இறந்ததாக அறுதியிட்டு கூறமுடியவில்லை என்று தான் கூறப்பட்டுள்ளதே தவிர யானை மின்சாரம் தாக்கி இறக்கவில்லை என்று கூறவில்லை. மேலும் யானை விஷதன்மையால் அல்லது நோயால் இறக்கவில்லை என்று மேற்படி அசாஆ.14, யானை மின்சாரம் தாக்கி இறந்துள்ளது என்று பிரேத விசாரணை அறிக்கை அசாஆ.3 ஆகியவை இருக்கும்பொழுது எதிரிகளின் இந்த வாதம் ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும் யானையின் துதிக்கையில் மின்சாரம் தாக்கியதற்கான காயங்கள் இருந்ததாக புகைப்படங்கள் அசாஆ.7 (உடன் இணைக்கப்பட்ட புகைப்படங்கள்), 10, 13 மற்றும் அசா.2, 3, 6, 7 ஆகிய சாட்சியங்கள் யானை மின்சாரம் தாக்கி தான் இறந்ததாக கூறுவதை நிரூபணமாக கொள்ளமுடியும். மின்சார கம்பங்கள் இடையே செல்லும் மின் கம்பியிலிருந்து மின்சாரம் எடுத்து வேலியில் அமைத்திருந்தால் குறைந்த அழுத்த மின்சாரத்தால் யானை தாக்கப்பட்டு இறந்ததாக அறிக்கை தாக்கல் செய்ய முடியாது என்று எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. அரசு தரப்பில் வாதிடும் பொழுது மின் பாதை மின் கம்பிகளிலிருந்து மின்சாரம் எடுக்கும் பொழுது குறைந்த அழுத்த மின்சாரம் என்பது 440volts ஆக இருக்கும் என்ற வாதத்தை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

19. எதிரிகள் தரப்பில் 1ம் எதிரி சாட்சியமளித்து எசாஆ.1 முதல் எசாஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களிலிருந்து 1ம் எதிரி மாதப்பா சம்பவ இடத்தில் இல்லை என்றும், சம்பவ சமயத்தில் அவர் கர்நாடாகாவில்

இருந்தார் என்றும் நிரூபிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது. அசா.2 குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்த பின்பு காலையில் தான் 1ம் எதிரி வெளியேறினார் என்று சாட்சியமளித்துள்ளார். இதனால் எதிரியின் வாதம் பொய்யென்றாகிறது. மேலும் வழக்கிற்காக 1ம் எதிரி கர்நாடகாவில் வேலை பார்க்கிறார் என்று வைத்துக்கொண்டாலும், அவர் சம்பவத்தன்று சம்பவ இடத்தில் இல்லையென முடிவு செய்ய முடியாது. மேலும் நிலம் 1ம் எதிரியின் பெயரில் இருப்பதாலும், நிலத்தை சுற்றி வேலி அமைத்துள்ளதாக ஏற்கனவே ஆராய்ந்ததின் அடிப்படையில் இருக்கும்பொழுது 71 வயதானவரான 2ம் எதிரி மட்டுமே மின்சாரம் செலுத்துவதற்கான வேலி அமைப்பது என்பது இயலாத ஒன்று. அதே சமயத்தில் 2ம் எதிரிக்கு மேற்படி கம்பி வேலி அமைத்தது குறித்தோ, அதில் மின்னிணைப்பு கொடுக்கும் விசயங்கள் குறித்தோ தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. எனவே மேற்படி குற்ற செயலுக்கு இரண்டு எதிாிகளுக்கும் பொதுவான நோக்கம் இருக்கின்றது. கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் Krishnagosh Vs State of West Bengal, dated 31.03.2009 என்ற முன்தீர்ப்பினை சுட்டிக்காட்டி, மேற்படி தீர்ப்பில், "From the evidence of Pws 2, 4, 7 and 8 it is seen that the accused persons were absconding since the date of incident when the dead body of the deceased lay in her matrimonial home. PW14 the Investigating Officer's evidence was to that effect. The High Court has rightly noted that the conduct of the accused appellants before it had a striking feature in the absence of any reasonable explanation and is an inculpating circumstance against them" என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் படியும், குற்றச்செயலின் தொடர்ச்சியாக எதிரிகள் தலைமறைவான செயல் அவர்களுடைய குற்ற செயலை காட்டுவதாக உள்ளது. யானை இறந்தவுடன் எதிரிகள் இருவரும் தலைமறைவானது எதிரிகளின் மீதான குற்றத்தை ருசுப்படுத்துவதாக உள்ளது.

20. தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்பதாலும்,

அரசுத்தரப்பு சாட்சிகள் அக்கறையுள்ள சாட்சிகள் (Interested Witness) என்பதாலும், அரசுத்தரப்பு வழக்கு நம்பத்தகுந்ததல்ல என்ற எதிரியின் வாதத்திற்கு அரசுத்தரப்பில் Forest Range Officer, Chungathara Range II Vs Abubakar – 1989 Crl.L.J.2038 என்ற முன்தீர்ப்பினை சுட்டிக்காட்டி வாதிட்டார், அதில், "One of the arguments advancecd by the learned Counsel for the respondents is that the evidence of Forest Officers alone cannot be made the basis of conviction without corroboration by independent witnesses. It is difficult to accept such a wide proposition. The rule of corroboration is a principle of prudence which should not be applied rigidly or punctiliously. If a crime is committed in such a manner that no other person could normally have been present in the vicinity, insistence on the rule of corroboration in such case would maul the cause of justice because such insistence would only help the perpetrator to go scot-free. It should not be forgotten that there is no rule of law that no evidence should be relied on unless there is corroboration. Facts and circumstances may warrant, sometimes, to act on such evidence even without corroboration" என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி மாண்புமிகு முன்தீர்ப்பின் படி ஊர்ஜிதப்படுத்தும் சாட்சியங்கள் இல்லாவிட்டாலும், சூழ்நிலைக்கு தகுந்தபடி அந்தந்த வழக்கிற்குண்டான சாட்சிகளை காரண அறிவின் படி நம்பலாம் என்று கூறியுள்ளது. மேலும் அரசுத்தரப்பில் Surendhar Kumar Vs State of Punjab என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பினை சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது, அதில் 14வது பத்தியில், "Further, it is contended by learned senior counsel appearing for the appellant that no independent witness was examined, despite the fact they were available. In this regard, it is to be noticed from the depositions of Devi Lal, Head Constable (PW-1), during the course of cross-examination, has stated that efforts were made to join independent witnesses, but none were available. The mere fact that the case of the prosecution is based on the evidence of official witnesses, does not mean that same should not be believed. தனிப்பட்ட சாட்சிகளை விசாரிக்காவிட்டாலும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களே

அரசுத்தரப்பு வழக்கை நிரூபிப்பவனாக உள்ளன இந்த இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. எதிரிகள் தரப்பில் யானை தந்தங்களில் பிரிவு 41ன் படி Identification mark செய்யப்படவில்லை என்றும், இறந்த யானையின் புகைப்படங்களில் யானையின் மீது மக்காச்சோள பயிர்கள் குவியலாக காணப்படவில்லை என்றும், அதனால் அரசு வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. அரசுத்தரப்பில் Hema Vs State through Inspector of Police, Madras – Criminal Appeal No.31/2023 என்ற மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தில் தீர்ப்பினை சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது. மேற்படி தீர்ப்பில் 10வது பாராவில், "It is also settled law for certain defects in investigation, the accused cannot be acquitted. This aspect has been considered in various decisions. In C.Muniappan and Others vs. State of Tamil Nadu, 2010 (9) SCC 567, the following discussions and conclusion are relevant which are as follows, 55. There may be highly defective investigation in a case. However, it is to be examined as to whether there is any lapse by the IO and whether due to such lapse any benefit should be given to the accused. The law on this issue is well settled that the defect in the investigation by itself cannot be a ground for acquittal. If primacy is given to such designed or negligent investigations or to the omissions or lapses by perfunctory investigation, the faith and confidence of the people in the criminal justice administration would be eroded. Where there has been negligence on the part of the investigating agency or omissions, etc. which resulted in defective investigation, there is a legal obligation on the part of the court to examined the prosecution evidence dehors such lapses, carefully, to find out whether the said evidence is reliable or not and to what extent it is reliable and as to whether such lapses affected the object of finding out the truth. Therefore, the investigation is not the solitary area for judicial scrutiny in a criminal trial" என்று கூறப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் கூறுவதை ஆராய்ந்த போது எதிரிகள்

தரப்பில் வாதிடும் சங்கதியை அரசுத்தரப்பிலுள்ள சிறு தவறாக கொள்ளலாமே தவிற அரசுத்தரப்பு வழக்கு பாதிக்கப்பட்டதாக ஆகாது. மேற்கண்ட குறைப்பாட்டால் அரசு தரப்பு வழக்கு பாதிக்கப்பட்டதாகாது.

**INDIAN PENAL CODE :**

**Sec.34 – Acts done by several persons in furtherance of common intention – When a criminal act is done by several persons in furtherance of the common intention of all, each of such persons is liable for that act in the same manner as if it were done by him alone.**

**WILDLIFE PROTECTION ACT :**

**Section.2 (16) "Hunting", with its grammatical variations and cognate expressions, includes ;**

**(a) killing or poisoning of any wild animal or captive animal and every attempt to do so ;**

**Section.9 - Prohibition of hunting — No person shall hunt any wild animal specified in (Schedules I, II) except as provided under section 11 and section 12.**

**Schedule I, Part (I), Serial No.83 – Elepha maximus**

**Section.51. Penalties—**(1) Any person who [contravenes any provision of this Act [(except Chapter VA and section 38J)]]or any rule or order made thereunder or who commits a breach of any of the conditions of any licence or permit granted under this Act, shall be guilty of an offence against this Act, and shall, on conviction, be punishable with imprisonment for a term which may extend to [three years], or with fine which may extend to [twenty-five thousand rupees], or with both:

**Provided that where the offence committed is in relation to any animal specified in Schedule I** or Part II of Schedule II or meat of any such animal or animal article, trophy or uncured trophy derived from such animal or where the offence relates to hunting in a sanctuary or a National Park or altering the boundaries of a sanctuary or a

National Park, such offence shall be punishable with imprisonment for a term which shall not be less than three years but may extend to seven years and also with fine which shall not be less than twenty five thousand rupees:

எனவே இந்நீதிமன்றம் எதிரிகள் இதச பிரிவு 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51–ன் கீழ் குற்றவாளிகள் என முடிவிற்கு வருகிறது. எனவே அவர்களுக்கு எதிரான தண்டனையை பற்றி குவிமுச பிரிவு 235 (2) கீழ் எதிரிகளிடம் வினவப்பட்ட போது, அவர்கள் பின்வருமாறு பதிலளித்தனர்.

1ம் எதிரி – நான் குற்றவாளி இல்லை

2ம் எதிரி – நான் குற்றவாளி இல்லை

எதிரிகள் செய்த குற்றம் தங்களுடைய சுயநலத்திற்காக ஒரு வாயில்லா ஜுவனான யானையை இறந்ததற்கான செயலாகும். யானை என்பது இந்த புவியில் மிகவும் புத்திசாலிதனம் கொண்ட மற்றும் அதிக உணர்வுக் கொண்ட மிக பெரிய உருவம் கொண்ட ஒரு படைப்பாகும். மேலும் நமது இந்தியாவில் யானையை கோவில்களில் ஒரு புனிதமான மிருகமாக வைத்து பூஜை செய்து அதன்மேல் கடவுள் விக்கரகத்தை வைத்து திருவிழா காலங்களில் ஊர்வலம் எடுத்து செல்வர். மேலும் யானையின் உருவத்தை இந்தியா, சீனா போன்ற இடங்களில் கடவுளாகவே பூஜிக்கின்றனர். தங்களுடைய சுயநலத்திற்காக யானை புலங்கும் இடமான வனப்பகுதியில் விவசாயம் செய்யும்போது யானை தனது வயிற்று பசிக்காக அருகிலுள்ள பயிர்களை சாப்பிடுவது இயல்பான ஒன்று. எனவே எதிரிகள் செய்த செயல் தண்டனையை குறைக்க கூடிய செயல் அல்ல. யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற தமிழ் பழமொழி கூட உள்ளது.

இறுதியாக,

1ம் எதிரிக்கு இதச 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51 பிரிவின் கீழான குற்றத்திற்கு 3 1/2 வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தும், மேலும் ரூ.25,000/- அபராதம் விதித்தும், அபராதம் கட்டத் தவறும் பட்சத்தில் 6 மாதம் மெய்காவல் தண்டனை விதித்தும், தீர்ப்பளிக்கப்படுகிறது. அவர் ஏற்கனவே அனுபவித்த தண்டனை காலம் ஏதாவது இருப்பின் பிரிவு 428 Cr.P.C இன் கீழ் தண்டனை காலத்தில் கழித்துக்கொள்ள உத்தரவிடபடுகிறது.

2ம் எதிரிக்கு இதச 34 உ/இ இந்திய வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 9 உ/இ 51 பிரிவின் கீழான குற்றத்திற்கு 3 1/2 வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தும், மேலும் ரூ.25,000/- அபராதம் விதித்தும், அபராதம் கட்டத் தவறும் பட்சத்தில் 6 மாதம் மெய்காவல் தண்டனை விதித்தும், தீர்ப்பளிக்கப்படுகிறது. அவர் ஏற்கனவே அனுபவித்த தண்டனை காலம் ஏதாவது இருப்பின் பிரிவு 428 Cr.P.C இன் கீழ் தண்டனை காலத்தில் கழித்துக்கொள்ள உத்தரவிடபடுகிறது.

தீர்ப்பின் நகல் எதிரிக்கு உடனே வழங்க உத்தரவிடபடுகிறது. மேல்முறையீடு செய்வதற்கான உரிமையும் அவருக்கு விளக்கப்பட்டது.

இவ்வழக்கில் PR.No.4/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.5 மற்றும் 6 16.10.2024 அன்று வனக்காப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, இறந்த யானையின் தந்தங்கள் வனத்துறையிடம் உள்ளது. அதை வனச்துறையினரே இந்த தீர்ப்பின் மேல்முறையீடு காலம் வரை பத்திரமாக வைத்திருக்க வேண்டுமென்றும், மேல்முறையீடு காலத்திற்கு பின்னிட்டு அரசு அருங்காட்சியகத்திலோ அல்லது வனத்துறை கல்லூரி ஆராய்ச்சிக்காகவோ

உபயோகப்படுத்திக்கொள்ள வனத்துறையின் முடிவிற்கு விடப்படுகிறது. வழக்கு சொத்துக்கள் சா.பொ.2 முதல் 4 வரையிலான சான்று பொருட்கள் 16.10.2024 அன்று வனக்காப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, இவ்வழக்கில் மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கேற்பவோ அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டோ அழிக்க வனத்துறைக்கு உத்தரவிடப்படுகிறது. PR.No.08/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 32 GB Sandisk Ultra Micro SD memory Card மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. PR.No.5/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள Item No.1 முதல் 11 வரையிலானவை மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கேற்பவோ அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டோ அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சொல்லப்பட சுருக்கெழுத்தரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

KUPPUSAMY SIVAKUMAR

Digitally signed by KUPPUSAMY SIVAKUMAR
Date: 2026.08.13 18:15:06 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
கோயம்புத்தூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள் :**

| | | |
|---|---|---|
| அ.சா . 1 | 21.06.2022<br>24.06.2022 | திரு.சந்தோஷ்குமார், மத்திய புலனாய்வு துறை துணை கண்காணிப்பாளர் |
| அ.சா. 2 | 06.07.2022 | திரு.முத்து, வனச்சரக அலுவலர் |

| | | |
|---|---|---|
| அ.சா. 3 | 06.04.2024 | திரு.அசோகன், கால்நடை உதவி மருத்துவர் |
| அ.சா. 4 | 15.06.2024 | திரு.சுவாமிநாதன், சார்பதிவாளர் |
| அ.சா. 5 | 15.06.2024 | திரு.விஜயராஜன், வட்ட துணை ஆய்வாளர் |
| அ.சா. 6 | 15.06.2024 | திரு.மகேந்திரன், உதவி செயற்பொறியாளர் |
| அ.சா. 7 | 02.07.2026 | திரு.வெங்கடாசலம், கிராம நிர்வாக அலுவலர் |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.04.2021 | முதல் தகவல் அறிக்கை (15 தாள்கள்) | அசா.1 |
| அ.சா.ஆ.2 | 16.06.2021 | பதிவு துறை ஆவணங்கள் (25 தாள்கள்) | அசா.1 |
| அ.சா.ஆ.3 | 19.12.2020 | சடலக்கூராய்வு அறிக்கை (15 தாள்கள்) | அசா.1 |
| அ.சா.ஆ.4 | 17.06.2021 | பு.எண்.675/1, 2, 5A, 5B ஆகிய புலத்திற்கான A register, Chitta சான்றொப்பம் இட்ட நகல்கள் (5 தாள்கள்) | அசா.1 |
| அ.சா.ஆ.5 | 30.04.2021 | மின்சார வாரியம் கொடுத்த புகார் சம்மந்தமான ஆவண கோப்பு | அசா.1 |
| அ.சா.ஆ.6 | 12.06.2021 | Receipt Memo | அசா.1 |
| அ.சா.ஆ.7 | 15.06.2021 | பார்வை மகஜர் | அசா.1 |
| அ.சா.ஆ.8 | 15.06.2021 | Field No.675 மல்லன்குழி கிராமத்தின் வரைபடம் வரைபடம் (Annexure – A) | அசா.1 |
| அ.சா.ஆ.9 | 15.06.2021 | சம்பவ இடத்திற்கு மேலே செல்லும் மின்சார வழித்தடத்தினை காட்டும் வரைபடம் (Annexure – B) | அசா.1 |
| அ.சா.ஆ.10 | – | இறந்த யானையின் புகைப்படம் (Annexure – C) (6 எண்ணிக்கைகள்) | அசா.1 |
| அ.சா.ஆ.11 | 15.06.2021 | Receipt Memo (1ம் எதிரி பெற்றிருந்த மின் இணைப்பு | அசா.1 |

| | | | |
|---|---|---|---|
| | | சம்மபந்தமான Consumer Ledger) (4 தாள்கள் கொண்டது) | |
| அ.சா.ஆ.12 | 15.06.2021 | சோதனை பட்டியல் | அசா.1 |
| அ.சா.ஆ.13 | 16.06.2021 | பார்வை மகஜர் மற்றும் புகைப்படம் (8 எண்ணிக்கைகள்) | அசா.1 |
| அ.சா.ஆ.14 | 16.06.2021 | Receipt Memo (வட்டார தடய அறிவியல் அலுவலகத்தில் வழங்கிய அறிக்கை) | அசா.1 |
| அ.சா.ஆ.15 | – | ஜுரஹள்ளி வனச்சரகத்தின் Rainfall Registerன் 18 மற்றும் 19வது பக்கத்தின் சான்றிட்ட நகல் (15 தாள்கள்) | அசா.1 |
| அ.சா.ஆ.16 | 17.06.2021 | சர்வே எண்.675/1, 675/2, 675/5A, 675/5B ஆகிய சர்வே எண்களுக்கான அடங்கள் மற்றும் ஆ பதிவேடு (9 தாள்கள்) | அசா.1 |
| அ.சா.ஆ.17 | 17.06.2021 | மாதஹள்ளி கிராமத்தின் தட்ப வெப்ப நிலையை காட்டக்கூடிய பதிவேட்டின் நகலினை பெற்ற கவரிங் லெட்டர் | அசா.1 |
| அ.சா.ஆ.18 | 18.06.2021 | சர்வே எண்.675/1, 675/2, 675/5A, 675/5B எண்களிலுள்ள மண் அமைப்பின் அறிக்கை | அசா.1 |
| அ.சா.ஆ.19 | – | மின்சாரம் எடுக்க பயன்படுத்திய வயர் மூங்கில் குச்சியின் புகைப்படம் (5 புகைப்படங்கள்) | அசா.1 |
| அ.சா.ஆ.20 | 19.06.2021 | அசாஆ.19 பெற்றுக்கொண்டதற்காக சிபிஐ கொடுத்த Receipt Memo | அசா.1 |
| அ.சா.ஆ.21 | 29.06.2021 | 1ம் எதிரி பயன்படுத்திய 9663061372 என்ற எண்ணிற்கான call data record (4 தாள்கள் கொண்டது) | அசா.1 |
| அ.சா.ஆ.22 | 01.07.2021 | தமிழ்நாடு கால்நடை மற்றும் வனவிலங்கு அறிவியல் பல்கலைகழகத்தின் அறிக்கை | அசா.1 |
| அ.சா.ஆ.23 | 05.07.2021 | 2ம் எதிரி மற்றும் அஸ்வினி, சசிக்குமார் ஆகியோர்கள் பயன்படுத்திய மொபைல் எண்களின் call record (7 | அசா.1 |

| | | | |
|---|---|---|---|
| | | தாள்களை கொண்டது) | |
| அ.சா.ஆ.24 | 05.07.2021 | இறுதி சடலக்கூராய்வு அறிக்கை (16 தாள்கள் கொண்டது) | அசா.1 |
| அ.சா.ஆ.25 | 29.09.2021 | புகார் | அசா.1 |
| அ.சா.ஆ.26 | – | இரும்பு கம்பி சுமார் 24 மீட்டர் அதன் கலர் புகைப்படம் | அசா.2 |
| அ.சா.ஆ.27 | 29.01.2021 | தடய அறிவியல் அறிக்கை | அசா.3 |
| அ.சா.ஆ.28 | 19.12.2020 | கைப்பற்றுதல் மகஜர் | அசா.6 |
| அ.சா.ஆ.29 | 19.12.2020 | FMB sketch வழங்க கொடுத்த வேண்டுகோள் கடிதம் | அசா.7 |
| அ.சா.ஆ.30 | – | களஆய்வு அறிக்கை | அசா.7 |
| அ.சா.ஆ.31 | – | FMB Sketch | அசா.7 |

**அரசுத்தரப்பு சான்று பொருட்களின் பட்டியல் :**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1 | 32 GB Sandisc Ultra Micro SD Memory Card | அசா.1 |
| அ.சா.பொ.2 | மூங்கில் கம்பத்தில் கட்டப்பட்டு கொக்கியாக பயன்படுத்தப்பட்ட இரும்பு கம்பி சுமார் 0.48 மீட்டர் ஒன்று | அசா.2 |
| அ.சா.பொ.3 | வேலி அமைக்க பயன்படுத்தப்பட்ட கம்பம் 4 சுமார் தலா 2 மீட்டர் நீளம் கொண்டது | அசா.2 |
| அ.சா.பொ.4 | வெள்ளை நிற HC PVC wire and cable 10 sq.mm 1100 வோல்ட் | அசா.2 |
| அ.சா.பொ.5 | வலது தந்தம் நீளம் 87.5 செ.மீ. சுற்றளவு 19 செ.மீ | அசா.2 |
| அ.சா.பொ.6 | இடது தந்தம் நீளம் 87 செ.மீ. சுற்றளவு 18.5 செ.மீ | அசா.2 |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் :**

| | | |
|---|---|---|
| எ.சா . 1 | 23.07.2026 | திரு.மாதப்பா, 1ம் எதிரி |

**<u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| எ.சா.ஆ.1 | – | 1ம் எதிரியின் ஆதார் நகல் | எசா.1 |
| எ.சா.ஆ.2 | – | ESI அடையாள அட்டை நகல் | எசா.1 |
| எ.சா.ஆ.3 | – | வாடகை ஒப்பந்தத்தின் நகல் | எசா.1 |
| எ.சா.ஆ.4 | – | LPG Gas புத்தகம் | எசா.1 |

KUPPUSAMY SIVAKUMAR

Digitally signed by KUPPUSAMY SIVAKUMAR
Date: 2026.08.13 18:15:13 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
கோயம்புத்தூர்.